## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 36/2017 மற்றும் 13/2022 கூட்டு விசாரணை வழக்கு | வா.சா. | : 1 |
| பெயர் | : ஆச்சிமுத்து | த/பெ. | : ஆறுமுகம் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : தேரடிதெரு |
| தேதி | : 11.10.2023 | வயது | : 53 /2023 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 12.32 P.M. – 1.44 P.M.

**அசல் வழக்கு 36/2017 ன் பிரதிவாதிகள் மற்றும் 13/2022 வழக்கின் வாதிகள் தரப்பில் கூட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

9) நான் ஆரம்பத்தில் வாதியாக இருந்து அ.வ.எண்.36/2017 வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம், என் அப்பா தான் தாக்கல் செய்தார். என் அப்பா இறந்ததால் அவரது வாரிசு என்ற அடிப்படையில் நான் தரப்பினராக சேர்ந்து இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் ஆமாம். இவ்வழக்கின் 3ம் வாதி அனஞ்சியா ஜெயந்தி எனக்கு இரத்த உறவுமுறை கிடையாது என்றால் சரி. 3ம் வாதிக்காக வழக்கு நடத்த பொது அதிகார முகவர் நியமிக்கப்பட்டு அதற்கான அனுமதி பெறப்பட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால், அது பொது அதிகார முகவருக்கு தான் தெரியும். இவ்வழக்கு நிலுவையிலிருந்தபோது 1ம் பிரதிவாதி முத்து இறந்துவிட்டார் என்றால் ஆமாம்.

10) முத்துவின் வாரிசுதாரரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டும் என்று மனு தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. வழக்குரையில் வழக்குச் சொத்திற்கு நான்குமால் குறிப்பிடவில்லை மற்றும் தென்னைமரங்கள், கிணறு ஆகியவை இருப்பதாகவும் குறிப்பிடவில்லை, 1ம் பிரதிவாதியின் பெயருக்கு அருகில் இறப்பு என்ற திருத்தமும் வழக்குரையில் மேற்கொள்ளவில்லை என்றால் சரி. அ.வ.எண். 13/2022 வழக்கில் வாதி

பாலுச்சாமியை அ.வ.எண். 36/2017 வழக்கில் என் தகப்பனார் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி.

11) அ.வ.எண்.36/2017ன் வழக்குச் சொத்துக்களை 1960 வா.சா.ஆ–1 பாகப்பிரிவினை ஆவணத்தின்படி ABC அட்டவணை சொத்துக்களாக பிரிக்கப்பட்டு நாங்கள் அனுபவித்து வருவதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அதில் 'B' அட்டவணைச் சொத்து தர்மலிங்கத்திற்கும், 3ம் வாதியின் தந்தை பழனிச்சாமிக்கும் ஒதுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 'C' அட்டவணை சொத்து பழனிச்சாமி, கந்தசாமி மற்றும் முருகானந்தம் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டதாக வாசகம் உள்ளதென்றால் சரி.

12) 'C' அட்டவணைச் சொத்து முருகானந்தத்திற்கு ஒதுக்கப்பட்டதாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால், அப்போது முருகானந்தம் உயிருடன் இல்லை. 'B'அட்டவணைச் சொத்து வடிவேல் மற்றும் மோகன் ஆகியோருக்கும் சேர்த்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 'A' அட்டவணைச் சொத்து என் தாத்தா மருதைசெட்டியார் மற்றும் என் தகப்பனார் ஆறுமுகச் செட்டியாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. மருதைசெட்டியார், ஆறுமுகசெட்டியார், முருகானந்தம், பழனிச்சாமி ஆகியோரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரி, இடைநிலை மனுவில் ஆறுமுக செட்டியாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன்.

13) வா.சா.ஆ.3 பொது அதிகார ஆவணத்தில் சொத்து விபரம் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை, இந்த ஆவணம் பொது அதிகார

முகவர் என்று காட்டுவதற்காக போடப்பட்டது. வா.சா.ஆ.4 ஆவணம் வடிவேலு என்பவரால் 3ம் வாதிக்கு கிரையம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த ஆவணத்தில் 23.01.1996 ல் வடிவேல் வகையறாவிற்கு பாகப்பிரிவினை ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த ஆவணத்தில் 9 இலக்கச் சொத்துக்கள் உள்ளது என்றால் சரி. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள 5 மற்றும் 6 வது இலக்கச் சொத்துக்கள் வா.சா.ஆ.4 ஆவணத்தில் இடம்பெற்றுள்ளதா என்றால் இல்லை.

14) வா.சா.ஆ.4 ஆவணத்தில் வடிவேல் அவருடைய பாகம் பொதுப்பாதிக்கு சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் மோகன் என்பவரின் வாரிசுகள் 3ம் வாதிக்கு கிரையம் கொடுத்த ஆவணம் என்றால் சரி. அந்த ஆவணத்தில் D பாக சொத்தில் பங்கு பாத்தியமுள்ள மற்ற பங்காளி பாகஸ்தர்களுடன் சேர்ந்து பாகப்பிரிவினை செய்து கொண்டதில் என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்திலும் வழக்கு 5, 6 இலக்கச் சொத்துக்கள் இடம் பெறவில்லை என்றால் சரி.

15) நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வழக்குச் சொத்துக்களை 1 முதல் 3 வாதிகள் கூட்டாக அனுபவித்து வருவதில் எவ்வித பிரச்சினையோ, கருத்து வேற்றுமையோ இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.7 ரசீதுகளில் M.ஆறுமுகம் என்ற பெயர் மட்டும் தான் இடம்பெற்றுள்ளது என்றால் சரி. அந்த ரசீதுகளில் 1–ற்கும் மேற்பட்ட பட்டா எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி, அது வேறு சொத்திற்குரியது. எனக்கு பொய்யாம்பட்டி கிராமத்தில் வீடு உள்ளதா என்றால் உள்ளது. அதற்கான வீட்டுவரி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

16) வா.சா.ஆ.9 ஆவணத்தில் முத்து வீடுகட்டியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால், வண்டிப்பாதை ஆக்கிரமிப்பில் வீடு கட்டியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. வழக்குச் சொத்திற்கு புல எண்கள். 347 மற்றும் 350 வழியாகத்தான் செல்லமுடியும் என்றால், அந்த வழியாகவும் செல்லலாம், மற்ற சொத்துக்கள் வழியாகவும் செல்லலாம். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வழக்குச் சொத்திற்கு செல்ல புல எண். 347 மற்றும் 350 பாதையை தவிர வேறு பாதை இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். புல எண். 347 மற்றும் 350ல் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள வீட்டை அகற்றவேண்டும் என்று நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் ஆமாம்.

17) புல எண். 347 மற்றும் 350ல் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியிருப்பதாக கூறியுள்ளதால், வழக்குச் சொத்திற்கு பாதையே கிடையாது என்பதால், அதை நாங்கள் பயன்படுத்தவோ, வழக்குச் சொத்தின் சுவாதீனத்திலோ இல்லை என்று சொன்னால் தவறு. அதனால் நாங்கள் வழக்குச் சொத்தை அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10 உழவடை பாத்திய விடுதலை பத்திரத்தில் நான் தரப்பினரா என்றால் இல்லை. அது என் அப்பா பெயரில் ஏற்பட்டுள்ளது. வா.சா.ஆ.10 ஆவணத்தில் எனது அப்பா ஆறுமுகம், கந்தசாமி, சாந்தா, தர்மலிங்கம் ஆகியோர் கையெழுத்து போட்டுள்ளார்களா என்றால் இல்லை.

18) வா.சா.ஆ.10 ஆவணத்தில் பிரதிவாதிகள் வகையறா சுவாதீனத்தை ஒப்படைத்ததாக வாசகம் இடம்பெற்றுள்ளது என்றால் சரி. அதில் ரூ.75,000/- பணம் பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்டதாகவும், 27 இலக்கச் சொத்துக்களும் இடம்பெற்றுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.10 ஆவணத்தை பிரதிவாதிகள் எழுதிக்கொடுக்கவில்லை, அதனை நாங்கள் உற்பத்தி செய்து

தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை. வா.சா.ஆ.10 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதால் அதனடிப்படையில் எவ்வித பரிகாரமும் நான் கோரமுடியாது என்றால் சரியல்ல.

19) அந்த ஆவணத்தில் உள்ள பிரதிவாதிகளின் கையெழுத்தை என் தகப்பனார் உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 ஆவணத்திற்கும், இவ்வழக்குச் சொத்திற்கும் சம்பந்தமில்லை, அது வேறு சொத்திற்கானது என்றால் சரி. வா.சா.ஆ.13 முதல் 15 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் நான் பிரதிவாதி தரப்பு மீது கொடுத்த புகார் என்றால் சரி. அந்த புகார் மனுவில் வழக்குச் சொத்துக்கள் எனக்கு சொந்தமானது என்று தான் சொல்லியுள்ளேன், அதில் வாதிகளுக்கு கூட்டுப்பாத்தியம் இருப்பதாக சொல்லவில்லை என்றால், பட்டா எண் போட்டுள்ளேன்.

20) வா.சா.ஆ.13 முதல் 15 வரையிலான ஆவணங்கள் வா.சா.ஆ.3 முதல் 5 வரையிலான கிரைய ஆவணங்களுக்கு பின்னிட்டு ஏற்பட்டுள்ளது என்றால் சரி. 3ம் வாதி காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால், அது அவரை தான் கேட்கவேண்டும். இதுநாள் வரையில் 3ம் வாதி பெயரில் பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரி. அ.வ.எண்.13/2022 வழக்கின் வாதி பால்ச்சாமி பெயரில் என் தகப்பனார் எழுதிக்கொடுத்த உழவடை பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன் நத்தம் காவல்நிலையத்தில் காண்பித்தார்கள்.

21) அந்த ஆவணத்திலுள்ள கையெழுத்து என் தகப்பனாருடையது அல்ல என்று காவல்நிலையத்தில் இதுவரை நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, கொடுத்துள்ளேன். நான் நீதிமன்றத்திலிருந்து மேற்படி ஆவணத்தில் கையெழுத்துக்களை ஒப்பீடு செய்ய நிபுணருக்கு

அனுப்பவேண்டும் என்று மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.16 மற்றும் 19 முதல் தகவல் அறிக்கைகள் பட்டாவை கொண்டு பொய்யாக பதிவு செய்யப்பட்ட வழக்கு என்பதால், அது இவ்வழக்கிற்கு சம்பந்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

22) நான் சென்னை அசோக்நகரில் வசித்து வருகிறேனா என்றால் ஆமாம், தற்போதும் அங்கு வசிக்கிறேன். 2ம் வாதி கந்தசாமிக்கு 71 வயதாகிறது. நான் சென்னையில் வசித்து வருவதாலும், 2ம் வாதிக்கு 71 வயதாவதாலும், 3 ம் வாதி கிரையம் பெற்ற நாளிலிருந்து சொத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காததாலும், நாங்கள் சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இல்லை, பிரதிவாதிகள் தான் 2017ம் ஆண்டு வரை மகசூலை எங்களுக்கு கொடுத்து சுமூக உறவில் இருந்தார் என்றால் தவறு. 2017ம் ஆண்டு பிரதிவாதிகளை உழவடையிலிருந்து சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்ற நடவடிக்கை எடுத்து சொத்தை ரியல் எஸ்டேட் நிறுவனத்திற்கு விலைபேசியதால் தான் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

23) அ.வ.எண்.36/2017 வழக்கின் சொத்துக்களை நிலஅளவையர் மூலம் அளக்கவில்லை என்றால் சரி. 02.04.2017 அன்று பிரதிவாதிகள் வழக்குச் சொத்தில் இடைஞ்சல் செய்ததாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. பிரதிவாதிகள் இடையூறு செய்தபோது, அக்கம்பக்கத்தினர் உதவி செய்ததாக சொல்லியுள்ளேன். அவர்கள் பெயர்களை சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. பிரதிவாதிகள் தங்களை உழவடைதாரர்களாக நியமிக்க கோரி நத்தம் வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள்.

24) அவ்வாறு பிரதிவாதிகள் எங்களுக்கு எதிராக மனு ்கொடுத்ததால் தான் அந்த கோபத்தின் காரணமாக தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகாமல்

பொய்யான காரணங்களை சொல்லி அ.வ.எண். 36/2017 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துக்கள் இரண்டு மலைகளுக்கு இடையில் அமைந்துள்ளது என்றால் சரி. வழக்குச் சொத்தின் நிலவியல் அமைப்பு சமமாக இல்லாமல் ஏற்ற இறக்கத்துடன் இருக்கும் என்றால் சரி. வழக்குச் சொத்துக்கள் போக அந்த இடத்தில் நிறைய அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பஞ்சமி நிலங்கள் உள்ளது, அதனை அபகரிக்க வேண்டி பிரதிவாதிகள் மீது நான் இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

25) பல ஆண்டுகளுக்கு முன்பு வாதிகளின் முன்னோர்கள், பிரதிவாதிகளின் முன்னோர்களை உழவடைதாரராக அமர்த்தி தற்போது பணம் பெறும் நோக்கத்தில் சட்டத்திற்கு புறம்பாக பிரதிவாதிகளை வெறியேற்ற இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.வ.எண். 36/2017 வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதால் எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

26) எனது தகப்பனார் 02.02.2010 தேதியில் அ.வ.எண்.13/2022 வழக்கின் வாதி பால்ச்சாமிக்கு எழுதிக்கொடுத்த உழவடை ஆவணம் அ.வ.எண்.36/2017 வழக்கின் பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் சரி. என் தகப்பனார் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நபர்களுக்குள் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மேற்படி உழவடை ஆவணத்தை பால்ச்சாமிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் தவறு. அந்த ஆவணத்திற்கு பின்னிட்டு பால்ச்சாமி அ.வ.எண். 13/2022ன் வழக்கு சொத்தில் உழவடை செய்து வருகிறார் என்றால் தவறு.

27) அ.வ.எண். 36/2017 வழக்கில் 15 ஏக்கர் நிலங்கள் மட்டும் தான் காட்டப்பட்டுள்ளது, மீதமுள்ள நிலங்கள் 02.02.2010 தேதியிட்ட உழவடை ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது, அதனால் அந்த கூடுதல் நிலத்தில் பால்ச்சாமி தான் உழவடை செய்து வருகிறார் என்றால் தவறு. அ.வ.எண்.13/2022 வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 1 முதல் 5 பிரதிவாதிகள் தனியாகவும், 6ம் பிரதிவாதி தனியாகவும், 7ம் பிரதிவாதி தனியாகவும் சொத்துக்களை அனுபவித்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால், அ.வ.எண்.36/2017 வழக்கில் 1 முதல் 3 வாதிகள் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

28) நான் சொத்தின் சுவாதீனத்தில் இல்லாததால் தான் முன்னுக்கு பின் முரணாக சொல்லி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பால்ச்சாமி என் மீது புகார் கொடுத்தும், அதற்கு நான் பால்ச்சாமி மீதும் புகார் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த புகார்கள் பொய்யாம்பட்டி மற்றும் செல்லப்பநாயக்கன்பட்டி கிராமங்களில் உள்ள வழக்குச் சொத்துக்கள் சம்பந்தப்பட்டது என்றால் சரி. பால்ச்சாமி எனது அனுபவத்தை இடைஞ்சல் செய்வதாக தனியாக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

29) பால்ச்சாமியை சட்ட விதிகளுக்கு உட்பட்டு தான் அவரை வழக்குச் சொத்திலிருந்து வெளியேற்ற முடியும் அதுவரை பால்ச்சாமி அ.வ.எண்.13/2022 வழக்கில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் பேரில் பால்ச்சாமியை காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு வரும்படி அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. அதனால் பால்ச்சாமி

சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருவதால் அவரை சட்டத்திற்குட்பட்டு வெறியேற்ற வேண்டுமே தவிர சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்ற கூடாது என்று கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 11.10.2023 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.